**செய்தி வெளியீடு எண்: 438** **நாள் : 09.09.2015**

**பத்திரிக்கை செய்தி**

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் பெசன்ட்நகர் கோட்டம், சென்னை சோழிங்கநல்லூர் பகுதி–2 ல் முன் கட்டுமான தொழில் நுட்பத்தை பயன்படுத்தி கட்டப்பட்டு வரும் 1500 பன்னடுக்குமாடி குடியிருப்புகளில் மீதமுள்ள 671 குடியிருப்புகளை (தூண் தளம் மற்றும் 10 தளங்கள்) தவணை முறை அடிப்படையில் ஒதுக்கீடு செய்ய விண்ணப்பங்கள் 27.07.2015 முதல் 19.08.2015 வரை விற்பனை மற்றும் பதிவு செய்ய நிர்ணயிக்கப்பட்டிருந்தது. தற்சமயம் விற்பனை மற்றும் பதிவு செய்வதற்கு கால நீட்டிப்பு செய்யப்பட்டு விண்ணப்பங்கள் 25.08.2015 முதல் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. விற்பனை மற்றும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பதிவு செய்ய கடைசி நாள் 23.09.2015 மாலை 5 மணி வரை.

இதில் உயர் வருவாய் பிரிவில் 90 வீடுகளும் (குடியிருப்பு ஒன்றின் தோராய விலை ரூ.58.60 இலட்சங்கள்), மத்திய வருவாய் பிரிவு 1 – ல் 216 வீடுகளும் (குடியிருப்பு ஒன்றின் தோராய விலை ரூ.40.71 இலட்சங்கள்) மத்திய வருவாய் பிரிவு –2 ல் 145 வீடுகளும் (குடியிருப்பு ஒன்றின் தோராய விலை ரூ.40.64 இலட்சங்கள்), குறைந்த வருவாய் பிரிவு –1ல் 80 வீடுகளும் (குடியிருப்பு ஒன்றின் தோராய விலை ரூ.27.33 இலட்சங்கள்), குறைந்த வருவாய் பிரிவு –2ல் 140 வீடுகளும் (குடியிருப்பு ஒன்றின் தோராய விலை ரூ.28.73 இலட்சங்கள்) மொத்தம் 671 வீடுகள் ஒதுக்கீட்டிற்க்கு தயாராக உள்ளன.

இத்திட்டத்தின் சிறப்பு அம்சங்கள் என்னவென்றால் சோழிங்கநல்லூர் பிரித்தியங்கரா தேவி கோவிலை ஒட்டியும், ஓ.எம்.ஆர் மற்றும் ஈ.சி.ஆர் இணைக்கும் கே.கே.சாலை அருகில் அமைந்துள்ளது மற்றும் இன்போசிஸ் (ம) எச்.சி.எல் நிறுவனங்களுக்கு அருகாமையிலும், சென்னை விமான நிலையத்திலிருந்து 17கி.மீ தொலைவிலும், அடையார் மத்தியகைலாசத்திலிருந்து 12 கி.மீ தொலைவிலும், திருவான்மியூர் இரயில் நிலையத்திலிருந்து 10கி.மீ தொலைவிலும் அமைந்துள்ளது. இத்திட்டத்தில் வீடு பெற விரும்புவோர் விண்ணப்பத்துடன் முன்வைப்புத் தொகையாக ரூ.50,000/– மட்டும் செலுத்தி குலுக்கல் முறையில் ஒதுக்கீடு பெறலாம். கட்டுமான பணி 80% முடிந்தவுடன் விற்பனை விலையில் 25% செலுத்தி மீதித்தொகையை 10 ஆண்டு கால தவணை முறையில் செலுத்தவும் வழி வகைசெய்யப்பட்டுள்ளது.

மேலும் விபரங்கள் அறிய
செயற்பொறியாளர் மற்றும் நிர்வாக அலுவலர் அலுவலகம்,
பெசன்ட்நகர் கோட்டம், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்,
டாக்டர்.முத்துலட்சுமி சாலை, அடையார், சென்னை – 600 020.
தொலைபேசி எண். 044– 24913561. மின்னஞ்சல் – tnhbbesantnagardivision@gmail.com
www.tnhb.gov.in

மேலாண்மை இயக்குநர்
தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்.

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**